**2026 ஆகஸ்ட் மாதம் 10– ஆம் தேதி திங்கட்கிழமை**

**கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி**

**O.S. நெம்பர் : 181/2025**

O.S. No.: 181/2025 – தமிழழகன் PW1 10.08.2026

த/பெ.வெள்ளைச்சாமி

**சாட்சி அழைக்கப்பட்டு 1 முதல் 4 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

12. தாவா 3 மற்றும் 4 இலக்க சொத்துக்களின் வா.சா.ஆ.1–ல் உள்ள பைமாஸ் எண்ணும், வழக்குரையில் சொன்ன பைமாஸ் எண்ணும் வெவ்வேறு என்றால் தட்டச்சு பிழையாகும். தாவா 3 மற்றும் 4 இலக்க சொத்துக்களின் வா.சா.ஆ.1–ல் நான்குமாலுக்கும், வழக்குரையில் உள்ள நான்குமாலுக்கும் வேறுபாடு உள்ளது என்றால் அவ்வாறு தான் தெரிகிறது. தாவா 4 அயிட்ட சொத்துக்களை எந்த ஆவணங்களில் இருந்து எடுத்தேன் என்றால் 1956ம் தேதிய ஆவணத்திலிருந்து எடுத்தேன். வா.சா.ஆ.2 உயிலில் சொல்லியுள்ள 1 முதல் 4 லக்க சொத்துக்களும், வழக்குரையில் சொல்லியுள்ள 1 முதல் 4 லக்க சொத்துக்களும் ஒன்றாக உள்ளதா என்றால் உள்ளது.

13. வா.சா.ஆ.2 உயிலில் சொல்லியுள்ள சொத்து விபரங்கள் சரியானது என்று நான் ஒப்புக்கொள்கிறேன் என்றால் சரிதான். எனது தந்தை தெளிவான சரியான மனநிலையில் இருந்தால்தான் வா.சா.ஆ.2 உயிலை தெளிவான சொத்துக்குறிப்புகளுடன் எழுத முடியும் என்றால் சரியல்ல. வழக்குரை 3, 4 லக்க சொத்துக்கள் குறித்து வா.சா.ஆ.3 முதல் வா.சா.ஆ.17 ஆவணங்களில் ஏதேனும் ஒரு ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எந்த

ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா 3, 4 லக்க சொத்துக்களில் 2 முதல் 4 பிரதிவாதிகள் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றாலும், வீடு கட்டி மின்இணைப்பு பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல, நான் வீடு கட்டி, மின்இணைப்பு பெற்றுள்ளேன்.

14. தாவா 3, 4 லக்க சொத்து சம்பந்தமாக கிஸ்து, அடங்கல், சிட்டாவோ தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். தாவா 3, 4 லக்க சொத்துக்கள் AWD நிலங்கள் என்றாலும், அதை எனது தந்தை அனுபவித்து வந்ததால் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா 3, 4 நிலங்கள் AWD நிலங்கள் என்றால் தற்போது அது AWD நிலங்கள் ஆகும், ஆரம்ப காலத்தில் பட்டா நிலமாக இருந்தது. எந்த ஆண்டு வரை பட்டா நிலங்களாக இருந்தது என்றால் வா.சா.ஆ.1 ன்படி 1956 ம் ஆண்டில் பாகப்பிரிவினை செய்தபோது பட்டா நிலமாக இருந்தது. 2 முதல் 4 பிரதிவாதிகள் அவர்களது சொந்த செலவில் தரிசு நிலமாக இருந்த நிலத்தை உழுது, விவசாயம் செய்தும், வீடு கட்டியும் அனுபவித்து வந்ததால் எனது தந்தை அவர்கள் பெயரில் உயில் எழுதி வைத்தார் என்றால் சரியல்ல.

15. உயிலில் தெளிவாக AWD (Assessed Waste Dry land) நிலங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்குரையில் 3, 4 லக்க சொத்துக்கள் AWD நிலமாக உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகமில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகளிடமிருந்து 3, 4 லக்க சொத்துக்களை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யான வழக்குரை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

16. 2ம் லக்க சொத்திற்கு தற்போது பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் கூட்டுப்பட்டாவாக உள்ளது. 5ம் பிரதிவாதி ஆனந்தன் பெயரில் தற்போது உள்ளதா என்றால் உள்ளது. 5ம் பிரதிவாதி யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்றால் 2 முதல் 4 பிரதவாதிகளிடமிருந்து வாங்கினார் என்றால் சரிதான். ஆவணங்களின்படி 5ம் பிரதிவாதிக்கு 2 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வந்ததினால் கிரையம் கொடுத்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உயிலின் அடிப்படையில் பட்டா மாற்றம் செய்து 2 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

17. எனது தந்தை 2019ம் இறந்தபோதே 2 முதல் 4 பிரதிவாதிகள் பட்டா பெயர் மாற்றம் செய்துவிட்டார்கள் என்றாலும், நாளது தேதிவரை நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி வா.சா.ஆ.8ன்படி உரிமை பெற்று, அவரது அனுபவத்தில் உள்ளது என்றாலும், அவரது அனுபவத்தை எதிர்த்து நான் எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் சரியல்ல. 5ம் பிரதிவாதி தகுந்த பிரதிபலனுக்காக கிரையம் பெற்றுள்ளார் என்பதால் வா.சா.ஆ.8 நிலைநிற்கத்தக்கது என்றால் சரியல்ல.

18. போடிநாயக்கனூர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கை திரும்ப பெற நீதிமன்ற உத்தரவு பெற்று வாபஸ் பெற்றேனா என்றால் பெற்றேன். அவ்வாறு எந்த உத்தரவு பெறவில்லை என்றாலும், இந்த வழக்கு சட்டத்தால் தடைசெய்யப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. உயிலில் 1ம் லக்க சொத்தை பொறுத்து எனக்கும், எனது

சகோதரர்களுக்கும் பாத்தியப்படுத்திக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், எனது தங்கை மற்றும் எனது தாயாருக்கும் எழுதவில்லை. உயிலில் தங்கைக்கு போதுமான சீர்வரிசைகள் கொடுத்து, திருமணம் செய்து கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது தவறு. எனக்கு இந்த வழக்கில் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் பொய்யாகவும், முரணாகவும் சாட்சியம் அளித்துள்ளதால் எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**5 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை** – ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 10.08.2026 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.08.10 18:35:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
10.08.2026.